

பாமாலை 162 இயேசு ஸ்வாமீ, சீமோன் யூதா

1 இயேசு ஸ்வாமீ, சீமோன் யூதா
என்னும் உம் அப்போஸ்தலர்,
ஒன்று சேர்ந்து உமக்காக
உழைத்த சகோதரர்
தங்கள் வேலை ஓய்ந்தபோது
வெற்றி கிரீடம் பெற்றனர்

2 அவர்கள் உம் அருளாலே
நேசத்தோடு போதித்தார்
சபையில் முற்காலம் பல
அற்புதங்கள் காண்பித்தார்
மார்க்க க் கேடுண்டான வேளை
எச்சரித்துக் கண்டித்தார்

3 சீமோன் யூதா போன்ற உந்தன்
பக்தர் பல்லோருடனும்
பளிங்காழி முன்னே நாங்கள்
உம்மைப் போற்றும் அளவும்
சாவுக்கும் அஞ்சாமல் உம்மை
பற்ற ஏவி அருளும்

4 அற்புதங்கள் செய்யும் வல்ல
மா பிதாவே ஸ்தோத்திரம் ;
நீதி சத்தியமும் நிறைந்த
மாந்தர் வேந்தே ஸ்தோத்திரம் ;
தூய ஆவியே என்றைக்கும்
உமக்கெங்கள் ஸ்தோத்திரம் ;